සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

(නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus)

NEW — ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka — 60 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2016 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2016 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2016**

| | | |
|---|---|---|
| ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය I, II | | පැය තුනයි |
| **வணிகக் கல்வியும் கணக்கீடும் I, II** | | **மூன்று மணித்தியாலம்** |
| Business and Accounting Studies I, II | | *Three hours* |

## வணிகக் கல்வியும் கணக்கீடும் I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

● பின்வரும் சம்பவத்தை அவதானித்து **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

குழந்தைகள் அணியும் ஆடைகளைத் தைப்பது தொடர்பான டிப்ளோமா பட்டத்தைப் பெற்றுள்ள திலினி என்பவர் ஆடைகள் வடிவமைப்பாளரான டிலான் என்பவருடன் இணைந்து மூலதனத்தைச் சமமாக ஈடுபடுத்தி முன்பள்ளியொன்றுக்கு அருகாமையிலுள்ள கட்டடமொன்றைக் கொள்வனவு செய்து 'திலு டெக்ஸ்' எனும் பெயரில் குழந்தைகள் அணியும் ஆடைகளைத் தைத்து விற்பனை செய்யும் வணிகமொன்றை ஆரம்பித்தார்.

**1.** இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் 'திலு டெக்ஸ்' வணிகத்தினால் திருப்தி செய்யப்படும் அடிப்படை மனிதத் தேவை யாது ?
(1) உணவு (2) உடை (3) இருப்பிடம் (4) பாதுகாப்பு

**2.** இச்சம்பவத்தில் உள்ள 'திலு டெக்ஸ்' வணிகத்துக்கான ஒரு வாய்ப்பு,
(1) முன்பள்ளிக்கு அருகாமையில் வணிகம் அமைந்திருப்பது ஆகும்.
(2) திலினி, ஆடைகளைத் தைப்பது தொடர்பில் டிப்ளோமா பட்டம் பெற்றிருப்பது ஆகும்.
(3) டிலான் வணிகத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டிருப்பது ஆகும்.
(4) திலினியும் டிலானும் சமமாக மூலதனத்தை இட்டிருப்பது ஆகும்.

**3.** இச்சம்பவத்தில் குறிப்பிடப்பட்ட 'திலு டெக்ஸ்' வணிகம் உரித்தாகும் வணிக நிறுவன வகை யாது ?
(1) தனியுடைமை (2) பங்குடைமை
(3) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி (4) சங்கம்

**4.** 'திலு டெக்ஸ்' வணிகத்தால் கொள்வனவு செய்யப்பட்ட கட்டடம் எந்த உற்பத்திக் காரணிக்கு உரித்தாகும் ?
(1) நிலம் (2) உழைப்பு (3) மூலதனம் (4) முயற்சியாண்மை

**5.** இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் 'திலு டெக்ஸ்' வணிகம் தொடர்பில் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) இது பொருள்களை உற்பத்தி செய்யும் ஒரு வணிகமாகும்.
(2) இது சேவைகளை வழங்கும் ஒரு வணிகமாகும்.
(3) இவ்வணிகத்தின் பெயரைப் பதிவுசெய்வது கட்டாயமானதல்ல.
(4) இவ்வணிகமானது சட்ட ஆளுமை உடையதாகும்.

[பக். 2 ஐப் பார்க்க

6. வணிகமொன்றின் ......①........ முதலீட்டின் பாதுகாப்பு தொடர்பில் அக்கறையுடையவர்களாகக் காணப்படுகின்ற அதேவேளை ......②........ நியாயமான சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதில் அக்கறையுடையவர்களாகக் காணப்படுவர்.
மேலே தரப்பட்ட கூற்றில் ① மற்றும் ② ஆகிய இடைவெளிகளில் இடம்பெறக்கூடிய சரியான சொற்களை ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) போட்டியாளர்கள், ஊழியர்கள் (2) உடைமையாளர்கள், வழங்குனர்கள்
(3) ஊழியர்கள், உடைமையாளர்கள் (4) உடைமையாளர்கள், ஊழியர்கள்

7. பின்வருவன வணிகச் சூழலொன்றில் இடம்பெற்ற சில நிகழ்வுகள் ஆகும்.
A - அங்கவீனமுற்ற போர்வீரர்கள் கொண்டாடுவதற்கு ஒரு தினத்தைப் பிரகடனப்படுத்துதல்
B - வங்கி வட்டி வீதத்தை அதிகரித்தல்
C - நுகர்வுப் பொருட்களுக்கான விலை மட்டங்களை அதிகரித்தல்
மேலே தரப்பட்ட நிகழ்வுகளிலிருந்து பொருளாதாரச் சூழல் சார்ந்த காரணிகளை மட்டும் உள்ளடக்கியுள்ள விடையைத் தெரிவுசெய்க.
(1) A யும் B யும் (2) A யும் C யும் (3) B யும் C யும் (4) A, B, C ஆகிய எல்லாம்

8. பின்வருவன வங்கிகளால் வழங்கப்படும் சில சேவைகள் ஆகும். இவற்றுள் நடைமுறைக் கணக்கைப் பேணும் வாடிக்கையாளருக்கு மட்டும் வழங்கப்படும் சேவை
(1) நிலையான கட்டளைகளைச் செயற்படுத்துதல்
(2) வங்கி மேலதிகப்பற்று வசதிகளை வழங்குதல்
(3) நிலையான வைப்புகளைப் பேணுதல்
(4) இலத்திரனியல் காசு தொடர்பிலான சேவைகளை வழங்குதல்

9. மக்கள் வங்கியின் நடைமுறைக் கணக்கு வாடிக்கையாளரான கபிலன் என்பவர் இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கு வாடிக்கையாளரான சுபயான் என்பவருக்கு காசோலை ஒன்றை வழங்கினார்.
இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் காசோலை தொடர்பில் வரையுனரையும் பணம் பெறுபவரையும் முறையே எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) கபிலன், மக்கள் வங்கி (2) சுபயான், கபிலன்
(3) இலங்கை வங்கி, சுபயான் (4) கபிலன், சுபயான்

10. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி செய்யப்பட்டிருந்த திசாநாயக்காவின் மோட்டார் வாகனமானது அவரின் வாகன ஓட்டுனரான பண்டார வாகனத்தைச் செலுத்திய வேளையில் விபத்துக்குள்ளானது.
இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் காப்புறுதி தொடர்பில் முதலாம் கட்சியினர், இரண்டாம் கட்சியினரை முறையே எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) திசாநாயக்கா, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
(2) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், திசாநாயக்கா
(3) பண்டார, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
(4) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், பண்டார

11. பின்வருவனவற்றுள் தொடர்பாடல் செயன்முறையின் 'பின்னூட்டல்' தொடர்பில் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) பின்னூட்டல் என்பது வாய்மொழி மூலம் அல்லது வாய்மொழி மூலமல்லாத ஊடகத்தினூடாக செய்தியை அனுப்புபவரிடமிருந்து பெறுபவருக்குக் கிடைக்கும் துலங்கல் ஆகும்.
(2) பின்னூட்டல் என்பது வாய்மொழி மூலம் அல்லது வாய்மொழி மூலமல்லாத ஊடகத்தினூடாக செய்தியைப் பெறுபவரிடமிருந்து அனுப்புபவருக்குக் கிடைக்கும் துலங்கல் ஆகும்.
(3) தொடர்பாடல் செயன்முறை நிறைவேற்றப்படுவதற்குப் பின்னூட்டல் கட்டாயமானதல்ல.
(4) செய்தியை அனுப்புபவர் செய்தி தொடர்பில் பணியாற்றும் விதம் பின்னூட்டல் ஆகும்.

12. பொருட்களைக் கொண்டு செல்லும் பாரிய கப்பல் ஒன்றின் போக்குவரத்து மூலங்களுக்கான உதாரணங்களை எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) துறைமுகம், ஆகாயவழிகள், டீசல் (2) டீசல், துறைமுகம், பிரதான வீதிகள்
(3) நீர்வழிகள், விமான நிலையம், டீசல் (4) டீசல், நீர் வழிகள், துறைமுகம்

[பக். 3 ஐப் பார்க்க

**13.** பின்வருவன வியாபாரமொன்றின் சில சந்தர்ப்பங்கள் ஆகும்.

A - அன்னதானம் வழங்குவதற்காக சுசிலா 200 கிலோகிராம் அரிசியைக் கொள்வனவு செய்தல்

B - வெதுப்பக உரிமையாளரான தனபாலன் சிற்றுண்டிச்சாலைகளுக்கு வெதுப்பக உற்பத்திப்பொருட்களை விற்பனை செய்தல்

C - செங்கல் உற்பத்தியாளரொருவர் தனது சொந்த வீட்டை நிர்மாணம் செய்யும் சுஜாதாவுக்கு 5 000 செங்கற்களை விற்பனை செய்தல்

மேற்குறிப்பிட்டவற்றுள் சில்லறை வியாபாரத்திற்கு உரித்தானவை,

(1) A யும் B யும் (2) A யும் C யும்
(3) B யும் C யும் (4) A, B, C ஆகிய எல்லாம்

**14.** வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியை வெற்றிகரமாக நடாத்துவதற்காக அதிபரால் செயற்குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றுக்கு அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர்.
இது முகாமைத்துவச் செயன்முறையின் எந்தக் கருமத்திற்கு உரித்தாகும் ?

(1) திட்டமிடல் (2) ஒழுங்கமைத்தல் (3) தலைமை வகித்தல் (4) கட்டுப்படுத்தல்

**15.** விளையாட்டுப் பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்று, ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளையொன்றின் பிறந்த நாளன்று மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொள்வனவின்போதும் விளையாட்டுப் பொருளொன்றை இலவசமாக வழங்கும்.
சந்தைப்படுத்தலின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக இச்சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள சந்தைப்படுத்தல் கலவை மாறி யாது ?

(1) உற்பத்திப்பொருள் (2) விலை (3) இடம் (4) மேம்படுத்தல்

**16.** பின்வருவனவற்றுள் ஆகக் குறைந்த இடரைக் கொண்ட முதலீட்டு மூலம் எது ?

(1) நிலையான வைப்பில் முதலீடு செய்தல் (2) ஆதனங்களைக் கொள்வனவு செய்தல்
(3) திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்தல் (4) சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்தல்

**17.** கொடுக்கல்வாங்கலொன்று கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

| சொத்துக்கள் (ரூ.) | = | உடைமையாளர் உரிமை | + | பொறுப்புக்கள் (ரூ) |
|---|---|---|---|---|
| – 15 000 | = | | | – 15 000 |

மேலே தரப்பட்டுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கல்

(1) சுதன் என்பவரிடம் ரூ. 15 000 பெறுமதியான பொருட்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டமை
(2) கடன்கொடுத்தோரான பிரணவனுக்கு ரூ. 15 000 காசாகச் செலுத்தப்பட்டமை
(3) வாடகை ரூ. 15 000 காசாகச் செலுத்தப்பட்டமை
(4) சொந்தத் தேவைக்காக உடைமையாளரால் ரூ. 15 000 பெறப்பட்டமை

**18.** பின்வரும் கொடுக்கல்வாங்கல்களில் உரிமையாண்மை குறைவடைவதில் தாக்கத்தை ஏற்படுத்துவது

(1) உரிமையாளரால் மேலதிக மூலதனமாக ரூ. 10 000 ஈடுபடுத்தப்படுதல்
(2) வணிகத்துக்கான வருமானம் ரூ. 6 000 காசாகப் பெற்றுக்கொள்ளப்படுதல்
(3) 10% கழிவுடன் சென்மதியாளரொருவருக்குக் காசு செலுத்தப்படுதல்
(4) காப்புறுதிக் கட்டணம் ரூ. 2 500 காசாகச் செலுத்தப்படுதல்

**19.** கொடுக்கல்வாங்கலொன்றைப் பதிவுசெய்வதற்கான ஓர் இரட்டைப் பதிவு கீழே தரப்பட்டுள்ளது.

காசுக் கணக்கு வரவு ரூ. 5 000
வருமதியாளர் கணக்கு செலவு ரூ. 5 000

இங்கு நிகழ்ந்த கொடுக்கல்வாங்கல்,

(1) ரூ. 5 000 பெறுமதியான சரக்குகள் கடனுக்கு விற்கப்பட்டமை
(2) வருமதியாளர் ஒருவரிடமிருந்து ரூ. 5 000 காசாகப் பெற்றுக்கொள்ளப்பட்டமை
(3) ரூ. 5 000 பெறுமதியான சரக்குகள் காசுக்கு விற்கப்பட்டமை
(4) வருமதியாளரில் ரூ. 5 000 அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிக்கப்பட்டமை

[பக். 4 ஐப் பார்க்க

**20.** கீழே X நிரலில் கணக்குகளின் வகைகளும் Y நிரலில் சில பேரேட்டுக் கணக்குகளும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. சொத்துக்கள் கணக்குகள் | A - சம்பளக் கணக்கு |
| 2. பொறுப்புக்கள் கணக்குகள் | B - விற்பனைகள் கணக்கு |
| 3. வருமானக் கணக்குகள் | C - வருமதியாளர் கணக்கு |
| 4. செலவினக் கணக்குகள் | D - சென்மதியாகவுள்ள மின்சாரச் செலவுகள் கணக்கு |

மேலே தரப்பட்டுள்ள X நிரலிலுள்ள கணக்குகளின் வகைகளுடன் Y நிரலிலுள்ள பேரேட்டுக் கணக்குகள் பொருந்துமாறு சரியான ஒழுங்குமுறையில் காணப்படும் விடை

(1) B, C, D, A (2) C, B, A, D (3) C, D, B, A (4) D, C, B, A

**21.** "செலவு அதிகரித்தல், வரவு குறைதல்" எனும் இரட்டைப் பதிவுத் தத்துவத்தை எடுத்துக்காட்டும் கணக்கு

(1) கொடுத்த கழிவுக் கணக்கு (2) காசுக் கணக்கு
(3) கொள்வனவுகள் கணக்கு (4) மூலதனக் கணக்கு

**22.** வணிகம் ஒன்றில் காப்புறுதிக் கட்டணங்கள் ரூ. 3 000 காசாகச் செலுத்தப்பட்டதனைப் பதிவுசெய்வதற்குப் பொருத்தமான மூல ஆவணம் மற்றும் முதன்மை ஏடு என்பவற்றை ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) கொடுப்பனவு உறுதிச்சீட்டு (கொடுப்பனவுக் கச்சாத்து), சில்லறைக் காசேடு
(2) காசேடு, கொடுப்பனவு உறுதிச்சீட்டு
(3) கொடுப்பனவு உறுதிச்சீட்டு, காசேடு
(4) நாட்குறிப்பு உறுதிச்சீட்டு (நாட்குறிப்புக் கச்சாத்து), காசேடு

**23.** 31.03.2016 இல் இருந்தவாறு வணிகமொன்றின் வங்கிக் கணக்கின் வரவு மீதி ரூ. 15 600 ஆக இருந்தபோதும் வங்கிக்கூற்று மீதி ரூ. 15 100 ஆகக் காணப்பட்டது. இவ்வித்தியாசத்திற்கான கொடுக்கல்வாங்கல்

(1) நிலையான கட்டளையின் மூலம் வங்கியால் செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணம் ரூ. 500 ஆகும்.
(2) வழங்கப்பட்டபோதும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூ. 500 ஆகும்.
(3) வங்கியால் பெறப்பட்ட நேரடி வைப்புகள் ரூ. 500 ஆகும்.
(4) வங்கியால் நேரடியாகப் பெறப்பட்ட பங்கிலாபம் ரூ. 500 ஆகும்.

**24.** கொட்டகலை களஞ்சியமானது 10 இனிப்புப் பொதிகளை ஒவ்வொன்றும் ரூ. 200 வீதம் கடனுக்கு விற்பனை செய்ததுடன் 10% வியாபாரக் கழிவையும் கழித்துக் கொண்டது. இக்கொடுக்கல்வாங்கல் காரணமாக இவ்வணிகத்தின்,

(1) கொடுத்த கழிவு ரூ. 200 ஆல் அதிகரிக்கும்.
(2) விற்பனை வருமானம் ரூ. 2 000 ஆல் அதிகரிக்கும்.
(3) கடன்பட்டோர் தொகை ரூ. 2 000 ஆல் அதிகரிக்கும்.
(4) கடன்பட்டோர் தொகை ரூ. 1 800 ஆல் அதிகரிக்கும்.

**25.** அமரன் வணிகத்தின் சில்லறைக் காசேட்டுக் கட்டுநிதியின் பெறுமதி ரூ. 2 000 ஆகும். 31.01.2016 இல் இருந்தவாறு சில்லறைக் காசாளரிடம் மீதியாக எஞ்சியிருந்த தொகை ரூ. 100 ஆகும். 01.02.2016 இல் இருந்து வணிகத்துக்கான சில்லறைக் காசேட்டுக் கட்டுநிதியை ரூ. 3 000 ஆக அதிகரிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது எனின், 01.02.2016 இல் சில்லறைக் காசேட்டுக் கட்டுநிதியை மீள நிரப்புவதனைப் பதிவுசெய்வதற்கான சரியான இரட்டைப் பதிவு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | காசேடு | வரவு ரூ. 1 900 | (2) | சில்லறைக் காசேடு | வரவு ரூ. 2 900 |
| | சில்லறைக் காசேடு | செலவு ரூ. 1 900 | | காசேடு | செலவு ரூ. 2 900 |
| (3) | சில்லறைக் காசேடு | வரவு ரூ. 1 900 | (4) | காசேடு | வரவு ரூ. 2 900 |
| | காசேடு | செலவு ரூ. 1 900 | | சில்லறைக் காசேடு | செலவு ரூ. 2 900 |

**26.** பின்வருவன புடைவைகள் வணிகமொன்றின் முதன்மை ஏடுகளில் பதிவுசெய்யப்பட்டிருந்த இரண்டு கொடுக்கல்வாங்கல்கள் ஆகும்.

A - மொறட்டுவை தளபாட வியாபாரிகளிடமிருந்து ரூ. 50 000 பெறுமதியான தளபாடங்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டமை.

B - கபிலன் என்பவருக்குக் கடனுக்கு விற்ற புடைவைகள் ரூ. 30 000.

மேலே தரப்பட்ட A மற்றும் B கொடுக்கல்வாங்கல்களை முதன்மை ஏடுகளில் பதிவுசெய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட மூல ஆவணங்களை ஒழுங்கு முறையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) கொள்வனவுப் பட்டியல், விற்பனைப் பட்டியல் (2) கொள்வனவுப் பட்டியல், கொடுப்பனவு உறுதிச்சீட்டு
(3) நாட்குறிப்பு உறுதிச்சீட்டு, விற்பனைப் பட்டியல் (4) நாட்குறிப்பு உறுதிச்சீட்டு, கொள்வனவுப் பட்டியல்

[பக். 5 ஐப் பார்க்க

**27.** வணிகமொன்றின் சென்மதியாளருக்குக் காசோலை மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டதனைப் பதிவுசெய்வதற்குப் பொருத்தமான மூலப்பதிவு ஏடு

(1) காசுக் கணக்கு (2) கொடுப்பனவு உறுதிச்சீட்டு

(3) வங்கிக் கணக்கு (4) பொது நாட்குறிப்பு

**28.** கீழே தரப்படுவது கணக்கீட்டுத் தவறொன்றைத் திருத்துவதற்குப் பொருத்தமான திருத்த நாட்குறிப்புப் பதிவு ஆகும்.

அலுவலக உபகரணக் கணக்கு வரவு ரூ. 40 000

அலுவலகச் செலவுகள் கணக்கு செலவு ரூ. 40 000

இவ்வணிகத்தின் கணக்குப் பதிவின்போது நிகழ்ந்த தவறு

(1) அலுவலகச் செலவுகள் ரூ. 40 000 அலுவலக உபகரணக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமை

(2) காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்கள் ரூ. 40 000 ஏடுகளிலிருந்து முற்றாக விடப்பட்டுள்ளமை

(3) செலுத்திய அலுவலகச் செலவுகள் ரூ. 40 000 முற்றாகப் பதிவுசெய்யப்படாமை

(4) அலுவலக உபகரணக் கொள்வனவு ரூ. 40 000 அலுவலகச் செலவுகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டமை

**29.** கீழே தரப்பட்டுள்ள வெற்றுக்கூட்டுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| பெற்றுக்கொண்ட வருடாந்த அங்கத்துவக் கட்டணம் | + | இதுவரை பெற்றுக்கொள்ளப்படாத வருடாந்த அங்கத்துவக் கட்டணம் | = | .................................. |

(1) ஓர் அங்கத்தவரின் வருடாந்த அங்கத்துவக் கட்டணம்

(2) வருடாந்த மிகை

(3) திரண்ட நிதியம்

(4) வருடாந்த அங்கத்துவக் கட்டண வருமானம்

**30.** பின்வருவன விளையாட்டுக் கழகமொன்று தொடர்பிலான சில செலவீன உருப்படிகள் ஆகும்.

A - விளையாட்டு மைதான பராமரிப்புச் செலவுகள்

B - பார்வையாளர் அரங்கு நிர்மாணிப்பதற்கான செலவுகள்

C - பயிற்றுவிப்பாளருக்கான உதவுதொகைகள் (அலவன்ஸ்)

மேலே தரப்பட்டுள்ள செலவுகளுள் விளையாட்டுக் கழகத்தின் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டியவை

(1) A யும் B யும் மட்டும் (2) A யும் C யும் மட்டும்

(3) B யும் C யும் மட்டும் (4) A, B, C ஆகிய எல்லாம்

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **31, 32** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

பின்வருவன அச்சகம் ஒன்று தொடர்பிலான சில செலவீன உருப்படிகள் ஆகும்.

* தாள்களின் கிரயம் * காப்புறுதிச் செலவுகள்
* எழுத்தாளருக்கான தனியுரிமைக் கட்டணம் * இயந்திர செயற்படுத்துனருக்கான கூலிகள்
* காவலாளிக்கான கூலிகள் * மின்சாரச் செலவுகள்

**31.** மேலே தரப்பட்ட அச்சகம் தொடர்பில் ஏனைய நேர் செலவு ஒன்று

(1) தாள்களின் கிரயம் (2) இயந்திர செயற்படுத்துனருக்கான கூலிகள்

(3) எழுத்தாளருக்கான தனியுரிமைக் கட்டணம் (4) காவலாளிக்கான கூலிகள்

**32.** மேலே தரப்பட்ட அச்சகத்தின் உற்பத்தி மேந்தலைக் கிரயத்தைக் கணிப்பிடுவதற்குப் பொருத்தமான உருப்படிகளை மட்டும் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

(1) காவலாளிக்கான கூலிகள், காப்புறுதிச் செலவுகள், மின்சாரச் செலவுகள்

(2) தாள்களின் கிரயம், எழுத்தாளருக்கான தனியுரிமைக் கட்டணம், இயந்திர செயற்படுத்துனருக்கான கூலிகள்

(3) தாள்களின் கிரயம், இயந்திர செயற்படுத்துனருக்கான கூலிகள், காவலாளிக்கான கூலிகள்

(4) எழுத்தாளருக்கான தனியுரிமைக் கட்டணம், காப்புறுதிச் செலவுகள், மின்சாரச் செலவுகள்

**33.** சாமந்தி வணிகமானது கட்டடமொன்றை 01.01.2015 இலிருந்து ரூ. 5 000 மாதாந்த வாடகைக்கு எடுத்தது. 31.12.2015 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ரூ. 50 000 கட்டட வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. 31.12.2015 இல் இருந்தவாறு இவ்வணிகத்தில்,

(1) செலுத்தப்பட்ட கட்டட வாடகைக் கணக்கு மீதி ரூ. 10 000 ஆகும்.

(2) நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள சென்மதியாகவுள்ள கட்டட வாடகை ரூ. 10 000 ஆகும்.

(3) நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள சென்மதியாகவுள்ள கட்டட வாடகை ரூ. 60 000 ஆகும்.

(4) கட்டட வாடகைக் கணக்கு மீதி ரூ. 5 000 ஆகும்.

[பக். 6 ஐப் பார்க்க

**34.** பின்வருவன வணிகமொன்றினால் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் தொடர்பிலான தகவல்கள் ஆகும்.

* கொள்விலை ரூ. 600 000
* எஞ்சிய பெறுமதி (இழிவுப் பெறுமானம்) ரூ. 50 000
* பயன்தரு ஆயுட்காலம் 5 ஆண்டுகள்

வணிகமானது மோட்டார் வாகனத்துக்கு நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வை மேற்கொண்டால், இம்மோட்டார் வாகனத்துக்கான பெறுமானத்தேய்விடத்தக்க தொகை யாது ?

(1) ரூ. 110 000 (2) ரூ. 550 000 (3) ரூ. 600 000 (4) ரூ. 650 000

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **35** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

பின்வருவன 31.12.2015 இல் இருந்தவாறு சதாம் வணிகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சில மீதிகள் ஆகும்.

| | ரூ. |
|---|---|
| சரக்கிருப்பு (01.01.2015 இல் இருந்தவாறு) ........... | 30 000 |
| விற்பனைகள் ........................................... | 200 000 |
| கொள்வனவுகள் ........................................ | 140 000 |
| உள்வந்த வண்டிக்கூலிகள் ............................ | 8 000 |
| கட்டடம் (கிரயத்தில்)..................................... | 400 000 |
| 01.01.2015 இல் கட்டடப் பெறுமானத் தேய்வு ஏற்பாடு | 100 000 |
| வருமதியாளர்கள் ........................................ | 25 000 |
| வங்கி மேலதிகப்பற்று .................................. | 18 000 |
| செலுத்தியாளர்கள் ........................................ | 30 000 |
| மின்சாரக் கட்டணங்கள் ................................... | 9 000 |
| விளம்பரப்படுத்தற் செலவுகள் ......................... | 6 000 |
| காசு மீதி ................................................ | 12 000 |
| கொடுத்த கழிவுகள் ..................................... | 1 500 |

மேலதிக தகவல்கள் :

* கட்டடங்களுக்கு நேர்கோட்டு அடிப்படையில் வருடாந்தம் 5% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.
* 31.12.2015 இல் இருந்தவாறு சரக்கிருப்புகள் ரூ. 40 000 ஆகும்.

**35.** இவ்வணிகத்தின் 31.12.2015 இல் முடிவடைந்த ஆண்டுக்கான விற்ற சரக்கின் கொள்விலை (விற்பனைக் கிரயம்)

(1) ரூ. 130 000. (2) ரூ. 138 000. (3) ரூ. 170 000. (4) ரூ. 178 000.

**36.** இவ்வணிகத்தின் 31.12.2015 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மொத்த இலாபம்

(1) ரூ. 22 000. (2) ரூ. 30 000. (3) ரூ. 62 000. (4) ரூ. 70 000.

**37.** இவ்வணிகத்தின் விநியோகச் செலவு ஒன்றையும் நிர்வாகச் செலவு ஒன்றையும் ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) விளம்பரப்படுத்தற் செலவுகள், கொடுத்த கழிவுகள்
(2) கட்டடப் பெறுமானத்தேய்வு, மின்சாரக் கட்டணங்கள்
(3) விளம்பரப்படுத்தற் செலவுகள், மின்சாரக் கட்டணங்கள்
(4) மின்சாரக் கட்டணங்கள், கொடுத்த கழிவுகள்

**38.** இவ்வணிகத்தின் 31.12.2015 இல் இருந்தவாறு கட்டடத்தின் தேறிய பெறுமதி யாது ?

(1) ரூ. 280 000 (2) ரூ. 300 000 (3) ரூ. 380 000 (4) ரூ. 400 000

**39.** 31.12.2015 இல் இருந்தவாறு இவ்வணிகத்தின் நடைமுறைப் பொறுப்புக்களின் பெறுமதி யாது ?

(1) ரூ. 18 000 (2) ரூ. 30 000 (3) ரூ. 43 000 (4) ரூ. 48 000

**40.** 31.12.2015 இல் இருந்தவாறு இவ்வணிகத்தின் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி

(1) ரூ. 77 000. (2) ரூ. 280 000. (3) ரூ. 357 000. (4) ரூ. 477 000.

※ ※

[பக். 7 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

60 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2016 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2016 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2016

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය I, II
வணிகக் கல்வியும் கணக்கீடும் I, II
Business and Accounting Studies I, II

## வணிகக் கல்வியும் கணக்கீடும் II

**முக்கியம் :** அறிவுறுத்தல்களுக்கமைய **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. மேலதிகமாக எழுதப்படும் விடைகள் பரீட்சார்த்தியினால் வெட்டிவிடப்படாத சந்தர்ப்பத்தில் பரீட்சகரினால் புள்ளிகள் வழங்கப்படாமல் வெட்டிவிடப்படும்.

※ **முதலாம்** வினா உட்பட, பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
※ விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

**1.** பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி **(i)** தொடக்கம் **(x)** வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

மாலதி என்பவர் 01.01.2016 இல் தன்னிடமிருந்த ரூ. 40 000 ஐயும் தனது நண்பியான சமன்மலியிடமிருந்து கடனாகப் பெற்றுக்கொண்ட ரூ. 25 000 ஐயும் ஈடுபடுத்தி கோவிலுக்கு அருகாமையில் கட்டடமொன்றை வாடகைக்குப் பெற்று, 'மாலி புதிய மலர்கள்' எனும் பெயரில் புதிய மலர்களை விற்பனை செய்யும் வணிகம் ஒன்றை ஆரம்பித்தார். விற்பனை செய்யவுள்ள மலர்களைப் பேணுவதற்காக அன்றைய தினமே ரூ. 20 000 பெறுமதியான கூடைகள் காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன. கோவிலுக்கு நாளாந்தம் வருகைதரும் பெரும் எண்ணிக்கையான பக்தர்களுக்கு மலர்களை விற்பனை செய்தலும் அப்பிரதேசத்தில் அமைந்துள்ள சிறிய மலர்க் கடைகளுக்கு மலர்களை வழங்குவதும் இவ்வணிகத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

2016 ஜனவரி மாதத்திற்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| ※ காசுக்குக் கொள்வனவு செய்த மலர்கள் .................. | ரூ. | 120 000 |
| ※ காசுக்குக் கொள்வனவு செய்த அலுவலக உபகரணம் | ரூ. | 18 000 |
| ※ காசுக்கு விற்பனை செய்த மலர்கள் ...................... | ரூ. | 170 000 |
| ※ மாதாந்த கடன் வட்டி செலுத்தியது ...................... | ரூ. | 250 |
| ※ கட்டட வாடகை செலுத்தியது ............................. | ரூ. | 4 000 |
| ※ மலர்களுக்கான போக்குவரத்துச் செலவுகள் செலுத்தியது | ரூ. | 5 000 |
| ※ சென்மதியாகவுள்ள மின்சாரக் கட்டணங்கள் ............ | ரூ. | 1 000 |
| ※ ஏனைய செலவுகள் செலுத்தியது ......................... | ரூ. | 8 000 |

31.01.2016 இல் மலர்கள் எஞ்சியிருக்கவில்லை. அலுவலக உபகரணங்களும் மலர்களைப் பேணுவதற்கான கூடைகளும் வருடாந்தம் நேர்கோட்டு முறையில் 12% பெறுமானத்தேய்வு செய்யப்படுதல் வேண்டும்.

01.02.2016 அன்று சமன்மலி, தான் இவ்வணிகத்தில் இணைந்துகொள்ள விரும்புவதாகவும் தான் வழங்கிய கடனை மூலதனமாகக் கருதுமாறும் தெரிவித்திருந்தார். மாலதி அவரது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டதுடன் சமன்மலியுடன் இணைந்து அவ்வணிகத்தை 'சமனலி புதிய மலர்கள்' எனும் பெயருடன் தொடரத் தீர்மானித்தார். மேலும் அன்றைய தினமே வணிகத்துக்கு உதவியாளர் ஒருவரும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்.

(i) (அ) 'மாலி புதிய மலர்கள்' என்பது உரித்தாகும் வணிக நிறுவன வகை எது ?
(ஆ) 'மாலி புதிய மலர்கள்' வணிகத்தில் காணத்தக்க வணிக வாய்ப்பு ஒன்றை எழுதுக.

(ii) 'சமனலி புதிய மலர்கள்' எனும் வணிகத்தின் பெயர் பதிவுசெய்யப்படல் வேண்டுமென சமன்மலி குறிப்பிட்டார்.
(அ) மேலுள்ள கூற்றுடன் நீர் இணங்குகின்றீரா ?
(ஆ) உமது விடைக்கான காரணமொன்றைக் குறிப்பிடுக.

(iii) (அ) 'மாலி புதிய மலர்கள்' எனும் வணிகத்துடன் ஒப்பிடும்போது 'சமனலி புதிய மலர்கள்' வணிகம் கொண்டுள்ள **அனுகூலம்** ஒன்றையும் **பிரதிகூலம்** ஒன்றையும் எழுதுக.
(ஆ) 'சமனலி புதிய மலர்கள்' வணிகத்துக்கு உதவியாளரொருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டமை உரித்தாகும் முகாமைத்துவக் கருமம் யாது ?

[பக். 8 ஐப் பார்க்க

(iv) 'சமனலி புதிய மலர்கள்' வணிகமானது சில்லறை வியாபாரத்தைப் போன்று மொத்த வியாபாரத்திலும் ஈடுபடுகிறது. இச்சம்பவத்தில் உள்ளடங்கியுள்ள சில்லறை வியாபாரம், மொத்த வியாபாரம் ஆகிய ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

(v) 01.01.2016 இல் இருந்தவாறு 'மாலி புதிய மலர்கள்' வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டைப் பெறுமதிகளுடன் எழுதுக.

(vi) அலுவலக உபகரணங்கள் ரூ. 18 000 காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டதனைப் பதிவுசெய்வதற்குப் பொருத்தமான இரட்டைப் பதிவை எழுதுக.

(vii) (அ) 'மாலி புதிய மலர்கள்' வணிகத்தினால் பேணப்பட வேண்டிய மூலப்பதிவு ஏடுகள் **இரண்டினை** எழுதுக.
(ஆ) 2016 ஜனவரி மாதத்திற்கான அலுவலக உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்வு எவ்வளவு ?

(viii) 31.01.2016 இல் வணிகத்தின் கையிலுள்ள காசைக் கணிப்பிடுக.

(ix) 31.01.2016 இல் முடிவடைந்த மாதத்திற்கான 'மாலி புதிய மலர்கள்' வணிகத்தின் இலாபம் அல்லது நட்டத்தைக் கணிப்பிடுக.

(x) (அ) 31.01.2016 இல் இருந்தவாறு 'மாலி புதிய மலர்கள்' வணிகத்தின் உரிமையாண்மை எவ்வளவு ?
(ஆ) 31.01.2016 இல் உள்ளவாறு 'மாலி புதிய மலர்கள்' வணிகத்தின் நிதி நிலைமைக் கூற்றில் காணப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் **இரண்டை** எழுதுக. **(02 × 10 = 20 புள்ளிகள்)**

## பகுதி I - வணிகக் கல்வி

(**இரண்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

**2.** (i) (அ) மனித விருப்பம் என்றால் என்ன ?
(ஆ) மனித விருப்பங்களில் காணப்படும் **இரண்டு** பண்புகளை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.
(அ) இறுதி நுகர்வுக்காகப் பொருள்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்யும் நபர் நுகர்வோர் ஆவார்.
(ஆ) வணிகங்களை அவற்றின் நோக்கங்களின் அடிப்படையில் பிரதானமாக தனியார் துறை வணிகங்கள், பொதுத் துறை வணிகங்கள் என வகைப்படுத்தலாம்.
(இ) வணிகமொன்றின் உடைமையாளர்கள் அகச்சூழல் காரணியாகக் காணப்படும் அதேவேளை வாடிக்கையாளர்கள் புறச்சூழல் காரணியாகக் காணப்படுகின்றனர்.
(ஈ) மனிதத் தேவைகள் பல்வகைப்பட்டனவாகக் காணப்படுவதுடன் விருப்பங்கள் வரையறுக்கப்பட்டவையாகக் காணப்படுகின்றன. (02 புள்ளிகள்)

(iii) சுரேஷ் கடற்கரையிலிருந்து சேகரிக்கும் சிப்பிகளைக் கொண்டு, உதவியாளர் ஒருவரின் துணையுடன் ஒட்டும் பசையையும் வர்ணங்களையும் பயன்படுத்தி அழகிய சிப்பியோட்டு நிர்மாணங்களை மேற்கொண்டு, சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்கின்றார்.
(அ) இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் வணிகத்தின் **இரண்டு** உற்பத்திக் காரணிகளை எழுதுக.
(ஆ) நீர் மேலே (iii) (அ) இல் குறிப்பிட்ட ஒவ்வோர் உற்பத்திக் காரணிகளுக்கும் இச்சம்பவத்தில் இருந்து ஒவ்வோர் உதாரணம் தருக. (02 புள்ளிகள்)

(iv) துன்ஹிந்த நீர்வீழ்ச்சிக்கு அண்மையில் வசிக்கும் ரூபன் என்பவர் உதவியாளர் ஒருவரின் துணையுடன் விவசாயிகளிடமிருந்து சோளப் பொத்திகளைக் கொள்வனவு செய்து அவற்றை அவித்து, உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்கின்றார்.
(அ) இச்சம்பவத்தில் உள்ளடங்கியுள்ள, ரூபன் வணிகத்தின் அகச்சூழலுக்குரிய **இரண்டு** தரப்பினரைக் குறிப்பிடுக.
(ஆ) ரூபனின் வணிகத்தின் மீது அக்கறை கொண்டுள்ள, மேலுள்ள சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு தரப்பினரைக் குறிப்பிட்டு, அத்தரப்பினர் இவ்வணிகத்தின் மீது அக்கறை கொண்டுள்ளமைக்கான காரணமொன்றை எழுதுக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

**3.** (i) (அ) வியாபாரம் என்றால் என்ன ?
(ஆ) வணிகம் ஒன்றின் நடவடிக்கைகளுக்கு உதவும் துணைச் சேவைகள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.
(அ) காப்புறுதியில், காப்புறுதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் தரப்பினர் காப்புறுதி பெறுவோர் எனவும் காப்புறுதிப் பத்திரத்தை வழங்கும் தரப்பினர் காப்புறுதி அளிப்போர் எனவும் அழைக்கப்படுவர்.
(ஆ) நிறுவனமொன்று உள்வாரியாக பல்வேறு தரப்பினரிடையே பல்வேறு ஊடகங்கள் வாயிலாக செய்திகள், தகவல்கள், கருத்துகளைப் பரிமாறுதல் வெளிவாரித் தொடர்பாடல் எனப்படும்.
(இ) மாணவனொருவன் தனக்குத் தேவையான உணவுகளை பாடசாலைச் சிற்றுண்டிச்சாலையில் இருந்து கொள்வனவு செய்தல் மொத்த வியாபாரம் எனப்படும்.
(ஈ) காசோலை ஒன்றிற்கு பணம் கொடுக்க வேண்டியவர் (வரைவுணி) எப்பொழுதும் ஒரு வணிக வங்கியே ஆகும். (02 புள்ளிகள்)

(iii) வணிகமொன்றின் களஞ்சியத்தில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தினால் ஏற்பட்ட நட்டம் தொடர்பில் ரூ. 200 000 ஐ நட்டஈடாக வழங்கவுள்ளதாக காப்புறுதிக் கம்பனி ஒன்று வணிகத்தின் உரிமையாளருக்குக் கடிதம் மூலம் தெரிவித்தது. இச்சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பாடல் செயன்முறைக்குரிய **அனுப்புபவர், செய்தி, ஊடகம்** மற்றும் **பெறுபவர்** ஆகியவற்றைத் தனித்தனியாக எழுதுக. (02 புள்ளிகள்)

[பக். 9 ஐப் பார்க்க

(iv) சுபயான் என்பவர் தினமும் பாடசாலைக்குப் புகையிரதத்தின் மூலம் வருகின்றார்.
(அ) சுபயான் பாடசாலைக்கு வருவதற்காகப் பயன்படுத்தும் போக்குவரத்து முறையுடன் தொடர்புடைய போக்குவரத்து மூலங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.
(ஆ) இலங்கையில் புகையிரதப் போக்குவரத்தை வழங்கும் அரசாங்க நிறுவனத்தின் பெயரைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

**4.** (i) (அ) திறைசேரி உண்டியல் என்றால் என்ன ?
(ஆ) முதலீட்டு மூலம் ஒன்றைத் தெரிவுசெய்கையில் கருத்திற் கொள்ளப்படும் **இரண்டு** காரணிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.
(அ) பங்குடைமையில் ஈடுபடுத்திய மூலதனத்திற்காக பங்காளர்களுக்குக் கிடைக்கும் திரும்பல் பங்கிலாபம் ஆகும்.
(ஆ) வங்கியொன்றின் நடைமுறைக் கணக்கில் பணத்தை முதலீடு செய்தல் உயர்ந்த வட்டி வருமானத்தைப் பெறுவதற்கான ஒரு முதலீட்டு மூலமாகும்.
(இ) நிறுவனமொன்றின் நோக்கங்களைத் தீர்மானிப்பதற்கும் அவற்றை அடைந்து கொள்வதற்கும் பொருத்தமான வழிமுறைகளைத் தீர்மானித்தல் தொடர்பான செயன்முறை திட்டமிடல் ஆகும்.
(ஈ) வணிகமொன்றினால் கவர்ச்சிகரமாகவும் இலாபகரமாகவும் திருப்திப்படுத்தக்கூடிய நுகர்வோர் துண்டமாக்கல் இலக்குச் சந்தை எனப்படும். (02 புள்ளிகள்)

(iii) கம்பனி ஒன்று உயர் போசணையைக் கொண்ட பிஸ்கட்டுகளை தயாரிக்கத் தீர்மானித்ததுடன் இதற்காக நவீன தொழிநுட்பம் வாய்ந்த இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தது. உற்பத்திச் செயன்முறையின் ஒவ்வொரு படிமுறைகளிலும் தரக்கட்டுப்பாட்டாளரினால் உற்பத்திப்பொருளின் தரம் மதிப்பிடப்படுகின்றது. அதேவேளை உற்பத்தி முகாமையாளரும் அவருக்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குகின்றார்.
முகாமைத்துவச் செயன்முறையில் காணப்படும் **நான்கு** கருமங்களையும் குறிப்பிட்டு, அவ்வொவ்வொரு கருமங்களுக்கான உதாரணங்களை இச்சம்பவத்திலிருந்து தெரிவுசெய்து, கீழே தரப்பட்டுள்ளவாறான அட்டவணையில் குறிப்பிடுக.

| முகாமைத்துவக் கருமம் | சம்பவத்தில் வழங்கப்பட்டுள்ள உதாரணங்கள் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

(02 புள்ளிகள்)

(iv) சப்பாத்துகளைத் தயாரிக்கும் வணிகமொன்று ஒரு துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டிருந்ததுடன் அதில் இப்புதிய சப்பாத்துகள் விசேட தோல்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் 01.01.2017 இல் கொழும்பு நகர மண்டபத்தில் அவற்றை அறிமுகஞ் செய்யவுள்ளதாகவும் அன்றைய தினம் செய்யப்படும் சகல கொள்வனவுகளுக்கும் 50% வியாபாரக் கழிவு வழங்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.
(அ) தமது சந்தைப்படுத்தல் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மேற்கூறப்பட்ட வணிகத்தினால் பயன்படுத்தப்பட்டுள்ள சந்தைப்படுத்தற் கலவையின் மாறிகள் **இரண்டினை** எழுதுக.
(ஆ) நீர் மேலே (iv) (அ) இல் எழுதிய ஒவ்வொரு சந்தைப்படுத்தல் கலவை மாறிக்கும் இச்சம்பவத்தில் உள்ளடங்கியுள்ள ஓர் உதாரணம் வீதம் தருக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

## பகுதி II - கணக்கீடு

(**இரண்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

**5.** (i) (அ) கணக்கீடு என்றால் என்ன ?
(ஆ) வணிகமொன்றின் உடைமையாளரது உரிமையின் மாற்றத்தில் தாக்கம் செலுத்தும் **இரண்டு** காரணிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) ரவி என்பவரது புடைவை வணிகத்தின் 2016 செப்தெம்பர் மாதத்திற்கான கடன் விற்பனைகள் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| திகதி | பட்டியல் இலக்கம் | கொள்வனவாளர் | அளவு | ஏனைய தகவல்கள் |
|---|---|---|---|---|
| 10.09.2016 | 102 | இராமன் | ஒவ்வொன்றும் ரூ. 200 வீதம் 10 டீ சேட்டுகள் | வியாபாரக் கழிவு 10% |
| 22.09.2016 | 103 | சீதை | ஒவ்வொன்றும் ரூ. 50 வீதம் 100 கைக்குட்டைகள் | வியாபாரக் கழிவு 5% |

**வேண்டப்படுவது:**
2016 செப்தெம்பர் மாதத்திற்கான ரவி வணிகத்தின் விற்பனை நாளேடு (02 புள்ளிகள்)

[பக். 10 ஐப் பார்க்க

(iii) தர்ஷன் என்பவர் 01.01.2016 இல் பாடசாலை உபகரணங்களை விற்பனை செய்வதற்கான வணிகமொன்றை ஆரம்பித்தார். பின்வருவன அன்றைய தினம் நிகழ்ந்த சில கொடுக்கல்வாங்கல்கள் ஆகும்.

1. தர்ஷன் வணிகத்தில் ஈடுபடுத்திய காசு ரூ. 50 000 ஆகும்.
2. காசுக்கு வாங்கிய தளபாடங்கள் ரூ. 20 000 ஆகும்.
3. கட்டடத்துக்குச் செலுத்திய மாதாந்த வாடகை ரூ. 5 000 ஆகும்.
4. வங்கியிடமிருந்து பெற்ற கடன் ரூ. 25 000 ஆகும்.
5. கடனுக்குக் கொள்வனவு செய்த பாடசாலை உபகரணங்கள் ரூ. 10 000 ஆகும்.

**வேண்டப்படுவது:**

(அ) மேற்குறித்த ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தைக் குறிப்பிடுக. (விடையளிப்பதற்காக கீழே தரப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்துக. உங்களுக்காக முதலாவது கொடுக்கல்வாங்கல் பதிவுசெய்து தரப்பட்டுள்ளது).

| **கொடுக்கல்வாங்கல்** | **சொத்துக்கள்** | **=** | **பொறுப்புக்கள்** | **+** | **உரிமையாளர் உரிமை மூலதனம்** |
|---|---|---|---|---|---|
| 1 | காசு<br>+ 50 000 | = | | | மூலதனம்<br>+ 50 000 |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |

(ஆ) 01.01.2016 இல் இருந்தவாறு தர்ஷன் வணிகத்தின் பின்வரும் உருப்படிகளின் பெறுமதிகளை வெவ்வேறாகக் குறிப்பிடுக.

1. நடைமுறையல்லாச் சொத்துகள்
2. நடைமுறைச் சொத்து
3. மொத்தப் பொறுப்புக்கள்
4. உரிமையாண்மை

(04 புள்ளிகள்)

(iv) ரமேஸ் வணிகத்தினால் 2016 ஜனவரி மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்ட சில்லறைக் காசேடு கீழே தரப்பட்டுள்ளது.

**சில்லறைக் காசேடு**

| **பெறுவனவு** | **பே. ப.** | **திகதி** | **விபரம்** | **கச். இல.** | **கொடுப்பனவு ரூ.** | **பகுப்பாய்வு நிரல்: பிரயாணம் ரூ.** | **தபால் ரூ.** | **காகிதாதிகள் ரூ.** | **பேரேட்டு கணக்கு ரூ.** | **பே. ப.** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 100 | | 1/1 | மீதி | | | | | | | |
| 1 400 | | 1/1 | காசு | | | | | | | |
| | | 1/3 | முச்சக்கரவண்டிக் கட்டணம் | 1 | 120 | 120 | | | | |
| | | 1/5 | முத்திரைக் கட்டணம் | 2 | 60 | | 60 | | | |
| | | 1/6 | பேனாக்கள் கொள்வனவு | 3 | 210 | | | 210 | | |
| | | 1/8 | பிரயாணச் செலவுகள் | 4 | 150 | 150 | | | | |
| | | 1/12 | ஜெயந்திக்குக் கொடுத்தது | 5 | 200 | | | | 200 | |
| | | 1/15 | காபன் தாள் கொள்வனவு | 6 | 180 | | | 180 | | |
| | | 1/20 | பதிவுக் கட்டணம் | 7 | 160 | | 160 | | | |
| | | 1/26 | வாடகை வாகனக் கட்டணம் | 8 | 200 | 200 | | | | |
| | | | | | 1 280 | 470 | 220 | 390 | 200 | |
| | | 1/31 | மீதி கீ.கொ.செ | | 220 | | | | | |
| 1 500 | | | | | 1 500 | | | | | |
| 220 | | 2/1 | மீதி கீ.கொ.வ. | | | | | | | |

**வேண்டப்படுவது:**

(அ) இவ்வணிகத்திற்கான சில்லறைக் காசேட்டுக் கட்டுநிதி

(ஆ) 01.02.2016 இல் மீள நிரப்பப்பட வேண்டிய காசு

(இ) மேலே தரப்பட்டுள்ள சில்லறைக் காசேட்டு கொடுக்கல்வாங்கல்களைப் பேரேட்டுக் கணக்குகளில் பதிவுசெய்தல்

(04 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

[பக். 11 ஐப் பார்க்க

6. (i) (அ) வங்கி மேலதிகப்பற்று என்றால் என்ன ?
(ஆ) வணிகமொன்றின் நடை முறைக் கணக்கில் பணத்தை வைப்புச் செய்வதற்குப் பொருத்தமான இரட்டைப் பதிவை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) ஒரே வகையான மலர்ச்சாடிகளைத் தயாரிக்கும் வணிகம் ஒன்றுடன் தொடர்புடைய 2016 மே மாதத்திற்கான சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- ※ உற்பத்தி செய்த அலகுகள் 100
- ※ நேர்ச் செலவுகள் ரூ. 30 000
- ※ மலர்ச்சாடிகளுக்கான போக்குவரத்துச் செலவுகள் ரூ. 5 000
- ※ ஓர் அலகுக்கான உற்பத்திக் கிரயம் ரூ. 400
- ※ கிரயத்தின் மீது 25% இலாப எல்லையுடன் விற்பனை விலை தீர்மானிக்கப்படுகின்றது.

**வேண்டப்படுவது:**

(அ) 2016 மே மாதத்திற்கான உற்பத்தி மேந்தலைக் கிரயம்
(ஆ) ஓர் அலகுக்கான விற்பனை விலை (02 புள்ளிகள்)

(iii) 30.09.2016 இல் இருந்தவாறு ஜனித் வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதி ரூ. 18 000 ஆகும். ஆனால் 2016 செப்தெம்பர் மாதத்திற்காக வங்கியிலிருந்து கிடைக்கப்பெற்ற வங்கிக்கூற்று மீதியானது வங்கிக் கணக்கு மீதியுடன் இணங்கவில்லை. பின்னர் வித்தியாசத்திற்கான காரணங்கள் பின்வருவனவெனக் கண்டுபிடிக்கப்பட்டன.

- ※ வங்கிக் கணக்கில் பதிவுசெய்யப்படாத நிலையான கட்டளைக் கொடுப்பனவுகள் ரூ. 6 000 ஆகும்.
- ※ வைப்புச் செய்யப்பட்ட போதும் செப்தெம்பர் மாதத்தில் வசூலிக்கப்படாத காசோலைகள் ரூ. 3 000 ஆகும்.
- ※ வழங்கப்பட்டபோதும் செப்தெம்பர் மாதத்தில் கொடுப்பனவிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூ. 4 800 ஆகும்.

**வேண்டப்படுவது:**

(அ) 30.09.2016 இல் உள்ளவாறான வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதியைச் செம்மையாக்குதல்
(ஆ) 30.09.2016 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றைத் தயாரித்தல் (04 புள்ளிகள்)

(iv) 31.03.2016 இல் உள்ளவாறான மோகன் என்பவரின் வணிகத்தின் பரீட்சைமீதி கீழே தரப்பட்டுள்ளது.

| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| மூலதனம் | | 100 000 |
| விற்பனைகள் | | 54 000 |
| வடுமதியாளர் | 32 000 | |
| சென்மதியாளர் | | 26 000 |
| தளபாடம் உபகரணங்கள் | 60 000 | |
| வங்கிக் கடன் | | 10 000 |
| மின்சாரக் கட்டணங்கள் | 8 000 | |
| கொள்வனவுகள் | 30 000 | |
| சம்பளமும் கூலியும் | 20 000 | |
| உள்வந்த வண்டிக்கூலிகள் | 6 000 | |
| காசு மீதி | 25 000 | |
| தொங்கற் கணக்கு | 9 000 | |
| | 190 000 | 190 000 |

மேலே தரப்பட்டுள்ள பரீட்சைமீதியைத் தயாரித்த பின்னர் பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

1. கட்டட வாடகை செலுத்தியது ரூ. 2 000 மின்சாரக் கட்டணங்கள் கணக்கின் வரவுப் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
2. விற்பனைக் கணக்கு மீதி ரூ. 45 000 பரீட்சைமீதியில் ரூ. 54 000 எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது:**

(அ) மேலுள்ள தவறுகளைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்
(ஆ) மேலுள்ள தவறுகளைத் திருத்திய பின்னருள்ள தொங்கற் கணக்கு

(04 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

[பக். 12 ஐப் பார்க்க

7. (i) (அ) சொத்து என்றால் என்ன ?
(ஆ) நிதி நிலைமைக்கூற்று ஒன்றில் காணப்படும் இரண்டு கூறுகளை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) லக்ஷ்மி விளையாட்டு கழகத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 120 ஆகும். ஓர் அங்கத்தவருக்கான வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ. 600 ஆகும்.

பின்வருவன 2015 ஆம் ஆண்டுக்கான அக்கழகத்தின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான தகவல்கள் ஆகும்.

| | | |
|---|---|---|
| பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கத்துவக் கட்டணங்கள் | ரூ. | 72 000 |
| விளையாட்டு மைதான பராமரிப்புச் செலவுகள் ...... | ரூ. | 12 000 |
| விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு .......... | ரூ. | 20 000 |
| பெறப்பட்ட நன்கொடைகள் .......................... | ரூ. | 5 000 |
| மின்சாரக் கட்டணங்கள் ................................ | ரூ. | 12 000 |
| உபசரிப்புச் செலவுகள் ................................ | ரூ. | 6 500 |
| ஒலிப்பெருக்கிச் சாதனம் கொள்வனவு .............. | ரூ. | 20 000 |
| நீர்க் கட்டணங்கள் .................................... | ரூ. | 4 500 |
| விளையாட்டுப் பயிற்சிச் செலவுகள் ................. | ரூ. | 15 000 |

**வேண்டப்படுவது:**

31.12.2015 இல் முடிவடைந்த ஆண்டுக்கான லக்ஷ்மி விளையாட்டுக் கழகத்தின் வருமானக் கூற்று (02 புள்ளிகள்)

(iii) ரவிஹரன் என்பவரது வணிகத்தின் 31.12.2015 இல் உள்ளவாறான பரீட்சைமீதி கீழே தரப்பட்டுள்ளது.

| | **வரவு (ரூ.)** | **செலவு (ரூ.)** |
|---|---|---|
| மூலதனம் ............................................ | | 500 000 |
| சரக்கிருப்பு (01.01.2015 இல் உள்ளவாறு) | 10 000 | |
| கொள்வனவுகள் .................................... | 280 000 | |
| விற்பனைகள் ........................................ | | 350 000 |
| வருமதியாளர் ....................................... | 30 000 | |
| சென்மதியாளர் ..................................... | | 13 000 |
| 15% வங்கிக் கடன் ............................... | | 50 000 |
| காணி கட்டடங்கள் (கிரயத்தில்) ............ | 400 000 | |
| இயந்திரங்கள் (கிரயத்தில்) .................... | 150 000 | |
| வங்கிக் கடன் வட்டி .............................. | 3 000 | |
| நிர்வாகச் சம்பளங்கள் ......................... | 14 000 | |
| கொடுத்த கழிவு .................................... | 3 200 | |
| பெற்ற கழிவு ........................................ | | 5 000 |
| இறைவரிக் கட்டணம் ............................ | 8 000 | |
| விளம்பரப்படுத்தல் ................................. | 12 500 | |
| கையிலுள்ள காசு ................................. | 7 300 | |
| | 918 000 | 918 000 |

மேலதிக தகவல்கள்:

- ※ 31.12.2015 இல் உள்ளவாறான சரக்கிருப்புகள் ரூ. 30 000 ஆகும்.
- ※ இயந்திரங்கள் வருடாந்தம் 10% நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்படுதல் வேண்டும்.
- ※ கடன்பட்டோரில் ரூ. 3 000 அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிக்கப்படுதல் வேண்டும்.

**வேண்டப்படுவது:**

(அ) 31.12.2015 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கூற்று (04 புள்ளிகள்)
(ஆ) 31.12.2015 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று (04 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

※ ※ ※